தலைப்பு 231 – கடன் இணக்க சபை திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 231 - கடன் இணக்க சபை திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடன் இணக்கசபை திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 செப்தம்பர் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கடன் இணக்கசபை திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கடன் இணக்கசபை திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக் கூடும். எனது அறிக்கை கடன் இணக்க சபை திணைக்களத்தினதும் பாராளுமன்றத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பண கணக்குகளில் ஆண்டின் இறுதியிலான மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	திறைசேரி அச்சுப் பதிவு SA-52 இன் பிரகாரம் ஆண்டில் முற்பண கணக்கிலிருந்து பணம் கொடுப்பனவு ரூபா 997,000 ஆக இருந்த போதும் அது ரூபா 474,536 ஆக ரூபா 522,464 குறைத்தும் குறுக்குப் பதிவின் மூலம் கொடுப்பனவு திறைசேரி அச்சிடல் SA-52 இன் பிரகாரம் ரூபா 474,536 ஆக இருந்த போதும் அது ரூபா 997,000 என ரூபா 522,464 தொகை கூடுதலாகவும் நிதிக் கூற்றுகளில் ACA-5 படிவத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.	முற்பண "பி" கணக்கிலிந்து பணப் பெறுவான ரூபா 997,000 ஆக இருந்த போதும் அது குறுக்குப் பகுதியில் மூலம் பெறுவனவுகளின் பெறுமதி என ரூபா 474,536 ஆக தவறுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது குறுக்குப் பதிவின் மூலம் பெறுவனவு ரூபா 474,536 ஆக இருந்த பெறுமதியை தவறுதலாக அவ்வாறே காசுப் பெறுவனவு பெறுமதியான ரூபா 997,000 என பதிவு செய்யப்பட்டு இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.	திறைசேரி அச்சுப் பிரதி SA-52 பிரகாரம் முற்பணக் பணக்கின் மீதி ACA-5 படிவத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(ii)	திறைசேரி அச்சுப் பதிவு SA-52 இன் பிரகாரம் முற்பண கணக்கின் ஆண்டில் பணமாக செலவு வைத்த ரூபா 985,210 ஆக இருந்த போதும் ரூபா 218,000 என ரூபா 767,210 குறைத்தும் குறுக்குப் பதிவின் மூலம் பெறுவனவு திறைசேரி அச்சுப்பதிவு. SA-52 இன் பிரகாரம் ரூபா 218,000 ஆக இருந்த போதும் ரூபா 985,210 என ரூபா 767,210 கூடுதலாகவும் நிதிக் கூற்றுகளில் ACA-5 படிவத்தில் காண்பிக்கப்பட்டு இருந்தது.	பணமாக செலவு வைத்தல் ரூபா 985,210 ஆக இருந்த இருக்க வேண்டிய பெறுமதி குறுக்குப் பதிவின் மூலம் உள்ள பெறுமதி ரூபா 218,000 ஆகவும் குறுக்குப் பதிவின் மூலம் பெற வேண்டிய பெறுமதியான ரூபா 218,000 இற்காக பணமாக செலவு வைத்த பெறுமதியான ரூபா 985,210 என தவறுதலாக பதிவு செய்யப்பட்டு இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.	திறைசேரி அச்சுப் பதிவு SA-52 இன் பிரகாரம் கட்டுநிதி கணக்கு மீதி ACA-5 படிவத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(ஆ) கட்டுநிதி மீதி

கட்டுநிதி மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	திறைசேரி அச்சுப்பதிவு SA-71 இன் பிரகாரம் ஏனைய மூலாதாரங்களில் இருந்து கட்டுநிதி மீதி கிடைப்பனவு ரூபா. 1,177,100 ஆக இருந்த போதும் அது நிதிக் கூற்றுகளில் ACA-3 படிவத்தில் காண்பிக்கப் பட்டு இருக்கவில்லை.	கணக்காய்வில் சுட்டிக்காட்டப் பட்ட பிரகாரம் ஏனைய மூலாதாரங்கள் மூலம் கட்டுநிதி பெறுவனவு ரூபா. 1,177,100 ஆக இருந்தது.	திறைசேரி அச்சுப் பதிவு SA-71 இன் பிரகாரம் கட்டுநிதி மீதி ACA-3 படிவத்தில் காண்பிக்கப் பட வேண்டும்.
(ii)	திறைசேரி அச்சுப்பதிவு SA-71 இன் பிரகாரம் செலவினங்கள் மூலம் கட்டுநிதி தீர்ப்பனவு ரூபா 68,240,878 ஆக இருந்த போதும் அது ரூபா. 67,112,925 ஆக ரூபா. 1,127,953 குறைத்து நிதிக் கூற்றுகளில் ACA-3 படிவத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வின் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் ஏனைய மூலாதாரங்கள் மூலம் பெறுவனவு ரூபா. 1,177,100 திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதி ரூபா 67,757,000 உடன் மொத்த கூட்டுத்தொகை ரூபா. 68,934,100 ஆக இருந்ததுடன் கட்டுநீதி தீர்ப்பனவு செலவினம் ரூபா. 68,240,878 மற்றும் காசு மூலம் தீர்வு செலவினம் ரூபா. 644,075 ஆக திருத்தம் செய்யப்பட வேண்டும். மீதி தேசிய மூன்று வடிவத்தில் வடிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும்	திறைசேரி அச்சுப்பதிவு SA-71 இன் பிரகாரம் கட்டுநிதி மீதி ACA-3 படிவத்தில் காண்பிக்கப் பட வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	13 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா. 62,610,000 இலிருந்து ரூபா. 11,718,665 சேமிக்கப்பட்டு இருந்ததுடன் அது 10 சதவீதம் முதல் 71 சதவீதம் வரை பரவி காணப்பட்டன.	2026 ஆம் ஆண்டு பாதீடு யில் தயாரிக்கும் போது உள்ளவரான தகவல் அடிப்படையில் பாதீட்டை தயாரிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	சிக்கனம் மற்றும் செயலாற்றல் தொடர்பான கவனம் செலுத்தப்பட்டு உரிய கவனத்துடன் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	231–1–1–0–1003-11 செலவின விடயத்திற்காக குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா. 2,330,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறு ஒதுக்கப்பட்ட பெறுமதி முழுமையாக சேமிக்கப்பட்டு இருந்ததுடன் அச்செலவின விடயத்தில் நிதி ஏற்பாடுகளில் மொத்த சேமிப்பு ரூபா. 4,921,627 ஆக இருந்தது. 2024 மார்ச் 26 ஆம் திகதி கடன் சலுகை சபையின் செயலாளர் தேசிய பாதீட்டு பணிப்பாளர் தொடர்புபடுத்தப்பட்ட DCB/AC/ 03/06/2024 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ரூபா 10,000 ஆன வாழ்க்கைச் செலவினப் படி கொடுப்பனவிற்காக காணப்படும் நிதி ஏற்பாடுடன் தேவைப்பாடு சரியாக இணங்காணப்படாமல் தேசிய பாதீட்டு திணைக்களத்திடம் குறைநிரப்பு கோரப்பட்டிருந்தது	2024 ஆம் ஆண்டுக்காக திணைக்களத்துக்கு மேலதிகமாக வாழ்க்கை செலவினப் படிகள் ரூபா. 2,330,300 ஆக இருந்ததுடன் அதற்கு மேலதிகமான நிதி ஏற்பாட்டு அளவு திணைக்களத்தின் வேண்டுகோள் இல்லாமல் பொது சுற்றறிக்கையின் மூலம் திணைக்களத்துக்கு கிடைத்த நிதி ஏற்பாடாகும். (பொ.நி.சு இலக்கம் 03/2024 அமைச்சரின் பொதுவான அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களில் மேலதிக தேவைப்பாடு கணக்கீடு செய்யும் போது ஊழியர் எண்ணிக்கையுடன் வாழ்க்கை செலவின படிகள் வழங்குவதற்காக மேலதிக நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்தது. பின்னர் மூன்றாவது காலாண்டின் இறுதியில் வாழ்க்கை செலவினத்திற்காக மேலதிக நிதிஏற்பாடு	தேவைப்பாடு சரியாக இனம் காணப்படாமல் நிதி ஏற்பாடு கூறக்கூடாது இனம் கண்டு இது ஏற்பாடு கூறப்பட வேண்டும்.

		எடுக்காமல் இருக்கின்ற நிதி ஏற்பாடு மூலம் முகாமை செய்வதற்கு முடியுமாக குறிப்பிட்டு கடிதமொன்று திணைக்களத்தினால் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது.	
(இ)	231-1-1-0-1101-11 செலவின விடயத்தில் சேமிப்புக்கள் 67 சதவீதமாக இருந்ததுடன் கிளை அலுவலகங்களை அமைத்ததன் பேரில் செயற்பாடுகள் பன்முகப்படுத்தப்பட்டமையால் பிரயாணச் செலவினம் குறைவடைந்து சேமிப்புக்கு காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2024 ஆம் ஆண்டில் கிளை அலுவலகங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததால் இந்த காரணத்தை கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாது.	போக்குவரத்து பணிகள் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர் ஒருவர் தற்போது அங்கீகரிக்கப்பட்ட சேவை அணியில் இல்லாமல் நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. 2026 ஆம் ஆண்டில் பாதீடு தயாரிக்கும் போது உள்ளவாறான தகவல் அடிப்படையில் பாதீடு தயாரிப்பதாக அறியத் தருகிறேன்.	நிதி ஏற்பாடுகளை சேமிப்பதற்காக சரியாக காரணங்கள் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் தேவைப்பாடு சரியாக இனங் காணப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(ஈ)	231-1-1-0-1404-11 செலவினை விடயத்தில் ரூபா. 2,068,000 ஆயிரம் அதாவது மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டில் ஒரு 14 சதவீதம் சேமிப்பதற்காக கிளை அலுவலகங்கள் அமைப்பதில் தாமதம் காரணமாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2024 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு புதிய கிளைகள் நிறுவுவது உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை	2024 ஆம் ஆண்டு பாதீட்டின் மூலம் கிளை அலுவலகங்கள் நிறுவுவதற்காக பணம் பெற்றுக் கொள்ளப்படாமல் இருந்ததால் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு புதிய கிளைகள் நிறுவுதல் உள்ளடக்கப்பட்டு எடுக்கவில்லை. 2026 ஆம் ஆண்டுக்காக பாதீடு தயாரிக்கும் போது உள்ளவரான தகவல் அடிப்படையில் பாதீடு தயாரிப்பதாக அறியத் தருகிறேன்.	தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(உ)	231-1-1-0-1506-11 செலவின விடயத்தில் ரூபாய் 71,360 அதாவது மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டில் 71 சதவீதத்தை சேமிப்பதற்காக ஆதன கடன்கள் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர் கள் திணைக்களத்தில் குறைவடைந்தமை நிதி ஏற்பாடுகள் சேமிப்பிற்கு காரணம் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2023 ஆம் ஆண்டின் போது இச்செலவின	இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களுக்காக வருகை தரும் உத்தியோகத்தர் களின் ஆதனக் கடனை கொடுப்பதற்கு நேர்வது என்ற எதிர்பார்ப்பில் இதற்காக நிதிஏற்பாடு கோரப்பட்டு இருந்தது. 2026 ஆம் ஆண்டில் பாதீட்டில் தயாரிக்கும் போது உள்ளவறான தகவல் அடிப்படையில் பாதீடு	தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.

	விடயங்களில் சேமிப்புகளுக்கு காரணங்களாக மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவைப்பாடு சரியாக இணங்காணப்படாமல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.	தயாரிப்பதாக தெரிவிக்கின்றேன்.	
(ஊ)	231-1-1-0-2401-11 செலவின விடயத்தில் ரூபா. 135,500 அதாவது மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டில் 34 சதவீத சேமிப்புக்காக பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சி நிகழ்ச்சிகள் எதிர்பார்த்த வகையில் 2025 ஆம் ஆண்டுக்கு பிற் போடப்பட்டுள்ளதாக காரணமாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் பதவியணி பயிற்சியளித்தல் 2024 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	காணப்படும் நிதி ஏற்பாட்டை உயர்ந்த அளவில் பயன்படுத்துவதற்காக உத்தியோகத்தர்கள் இயலளவு அபிவிருத்திக்காக செலவினை விடயங்களில் மாற்றப்பட்டு உரிய செயற்பாட்டுக்காக ஈடுபடுத்தப்பட்டது	தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

அவதானிப்புக்கள்				கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனா ன தொடர்பு	**பெறுமதி ரூபா.**	**இணங்காமை**		
(அ)	2019 இன் 04 ஆம் இலக்க கடன் இணக்க (திருத்த) சட்டம்				
(i)	1(1) ஆம் பிரிவு		கடன் இணக்க சபை 11 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் சபை 09 உறுப்பினர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.	அரசாங்க நிதியை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதால், பிரதான சபைக்கு 05 உறுப்பினர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர் அந்த உத்தியோகத்தர்கள்	தொடர்புடைய ட சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

				ஊடாக பணியைச் செய்ய முடியும் என்பதால் நியமனங்கள் செய்யப்படவில்லை.	
(ii)	8(3) ஆம் பிரிவு	994,500	சட்டத்தரணியாக 10 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவம் உள்ளவர்கள் அல்லது இலங்கை நிர்வாக சேவையில் அல்லது நாடளாவிய சேவையில் வகுப்பு I உத்தியோகத்தர் பதவியை வகிப்பவர்கள் அல்லது பதவியை வகித்தவர்களை சபை உறுப்பினர்களாக கொண்டிருக்க வேண்டிய போதிலும் அதற்கு புறம்பாக காலி கிளை சபைக்கு ஒரு அங்கத்தவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை உறுப்பினர் படி, பிரயாணச் செலவினப் படிகள் மற்றும் ஒன்றிணைந்த படிகள் என ரூபா 994,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	2019 இன் 04 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் உறுப்பினர்களை நியமிப்பதற்கான அதிகாரம் கௌரவ நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் கௌரவ அமைச்சருக்கு வழங்கப்படுவதால், அந்நியமனம் தொடர்பான மேலதிக விபரங்களை நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சிடமே கோர வேண்டியுள்ளது.	தொடர்புடைய ட சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2011 சனவரி 21 ஆந் திகதிய 1689/18 ஆம் இலக்க வர்த்தமானி	1,909,000	தலைவர் மற்றும் சபையின் அல்லது கிளை சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் தமது வீட்டில் இருந்து வெளியேறி உத்தியோக பூர்வ கடமைகளில் ஈடுபடும் போது அவருக்கு 06/2006 ஆம் இல்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 500 ஆன திரட்டிய படி ஒன்று செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒன்றிணைந்த படிகள் கொடுப்பனவின் போது தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தில் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அங்கத்தவர்கள் வருகை மற்றும்	இந்த ஒன்றிணைந்த பணிகள் கொடுப்பனவு தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு மற்றும் பொது திறைசேரியின் அறிவுறுத்தல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அரசு கணக்காய்வு பிரிவிலிருந்தும் எமக்கு ஆலோசனை கிடைத்ததுடன் அரச திறைசேரியிடம் விசாரிப்பதற்கு தினசரி விசாரிப்பதற்கு திட்டவட்டமான பிரிவொன்று இல்லாதிருந்ததால் பொது நிர்வாக அமைச்சிலிருந்து ஆலோசனை கோரப்பட்டுள்ளது அங்கு குறித்த	தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		வெளியேறல் பதிவு செய்யாததால் எவ்வளவு காலம் கடமையில் ஈடுபட்டது என்பது தொடர்பாக உறுதிப்படுத்தாமல் ரூபா 1,909,000 தொகை திரண்ட படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது.	உள்ளக சுற்றறிக்கை வெளியிடப்பட்டு அமைச்சின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதுடன் அதன் பிரகாரம் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சிலிருந்து ஆலோசனை கோரி அனுப்பியுள்ளது.	
(இ)	அரச பெறுகை வழிகாட்டல் கோவை 5.4.11 5.4.12 ஆம் பிரிவுகள்	வெட் வரிக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குனர் களுக்கு பணம் கொடுப்பனவு செய்யப்பட்ட பின்னர் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் அல்லது அதற்கு த்திற்கு முன்னர் தொடர்பான விபரங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டிய போதிலும் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கவில்லை.	வெட் வரி மீது திணைக்களம் இது வரை பதிவு செய்யப்படாத இருந்த தால் அதற்கான தேவைப்பாடு மேற்கொள்வதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக.	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்வதற்கு உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 745 ஆக இருந்ததுடன் அது ஆண்டில் தீர்வு செய்வதற்கு இருந்த 2058 ஆன மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் 36 சதவீதமான பெறுமதியை எடுத்திருந்தது இதில் பிரதான சபையின் 109 வழக்குகளும் கொழும்பு கிளையின் 113 வழக்குகளும் குருணாகல்மற்றும்	எமது திணைக்களத்தில் கடந்த ஆண்டில் நிரந்தர தட்டெழுத்தா ளர்கள் இல்லாமையால் தொழில்நுட்ப கல்லூரிகளில் இருந்து பயிலுனர்களாக ஆட்சேர்க்கப்பட்ட அந்த தட்டெழுத்தாளர்களின் நாளாந்த வருகை பலவீனமாக இருந்தது. எமது திணைக்களத்தில் சேவை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களே இந்த	வழக்குகளைத் தீர்வு செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	காலிக் கிளைகளின் வழக்குகளின் எண்ணிக்கை முறையே 293, 154 மற்றும் 76 ஆக எஞ்சியிருந்தது அதன் பிரகாரம் ஆண்டில் தீர்வு செய்வதற்கு இருந்த வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் ஒப்பிடும்போது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய வழக்கு எண்ணிக்கை அதிகரித்த சதவீதம் கம்பஹா கிளையாக இருந்ததுடன் அது 50 சதவீதமான பெறுமதியை எடுத்து இருந்தது.	செயற்பாட்டை மேற்கொள்கின்றனர். தட்டெழுத்தாளர்கள் அந்த உத்தியோகத்தர்களுக்கு பழக்கமான செயற்பாடுகள் இல்லாமையால் செயற்திறன் குறைந்தமையாலும் வடக்கு சான்றுகள் தாமதமாக இருந்தது. அதன் காரணமாக வழக்குகளை தீர்வு செய்தல் மற்றும் விசாரித்தல் செயற் திறனாக மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறான தடைகள் இருந்தும் 64 சதவீதமான முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருந்தது.	
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசாரணை செய்யப்பட்டு வரும் வழக்குகள் தொடர்பாக திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ஆண்டு 03 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 100 ஆகவும் ஆண்டு 05 இற்கும் 10 இற்கும் இடைப்பட்டிருந்த விசாரிக்கப்படும் வழக்குகள் எண்ணிக்கை 113 ஆகவும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட விசாரிக்கப்பட்டு வரும் வழக்குகளின் எண்ணிக்கை 17 ஆகவும் காணப்பட்டன அதன் பிரகாரம் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாத வழக்குகளின் எண்ணிக்கை 230 ஆக இருந்ததுடன் அது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்வதற்கு இருந்த 959 மொத்த வழக்குகள் எண்ணிக்கையின் 24 சதவீதமான பெறுமதியை எடுத்திருந்தது.	2025 ஜனவரி 27 ஆம் திகதி தட்டெழுத்தாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப் பட்டது. அதன் பிரகாரம் 2025 ஆம் ஆண்டின் போது செயற்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	வழக்குகளை தீர்வு செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2009 ஆம் ஆண்டு வரை பொறுப்பேற்கப்பட்ட இதுவரை தீர்க்கப்படாத 06 வழக்குகள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்ததுடன் 15 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் வழக்குகளும் இதில் காணப்படுகின்றன.	2025 ஏப்ரல் 22 ஆந் திகதி அளவில் தீர்வு செய்யப்படாத 05 வழக்குகள் காணப்படுகின்றன.	காலம் கடந்த வழக்குகளை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

வருடாந்த செயலாற்றல் அறிக்கை தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

கணக்காய்வு அவாதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக் களுடன் சமர்ப்பிக்கப்பட வில்லை.	எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	04 டெஸ்க்டொப் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட 05 நிறுவனங்களில் இருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன் 03 நிறுவனங்களினால் மாத்திரம் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. விதந்துரைகளின் பிரகாரம் Processor தேவைப்பாடு Intel Core i3 – 12th Gen or i5 குறிப்பிடப்பட்டிருந்த போதும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் Processor i3 மற்றும் i5 இற்காக கூறுவிலை சமர்ப்பித்திருந்ததுடன் ஏனைய கேள்விதாரரின் கேள்விகளில் குறிப்பிடப்பட்டிருந்த Processor வகையான i3 உம், i5 வகையே என்பதை கணக்காய்வின் போது தெளிவாக இனங்காண முடியாமல் இருந்தது.	04 டெஸ்க்டொப் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக நிறுவனங்களுக்கு எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட விருந்துரைகள் i3 மற்றும் i5 வகையான இரண்டு வகை குறிப்பிடப்பட்டிருந்தது எனினும் ஒரு நிறுவனத்தில் இருந்து மாத்திரம் i3 மற்றும i5 என வெவ்வேறாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் ஏனைய இரண்டு நிறுவனங்களும் i3 இற்கு மாத்திரம் கூறுவிலைகளை அனுப்பி இருந்தன. இந்த கூறுவிலைகள் அனைத்தும் தொழில்நுட்ப குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அக்குழுவினால் குறைந்த கூறுவிலையில் கொள்வனவு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டு இருந்தன. i3 டெஸ்க்டொப் கணினி கொள்வனவிற்காக மூன்று கேள்விதாரர் முன்வந்திருந்த மையால் அந்த அடிப்படையில்	சரியான கூறுவிலை களை சமர்ப்பிப்பதற்கு கேள்வித்தாளர்களை அக்கறை செலுத்தப்படுத்தல் வேண்டும்

		சமர்ப்பித்து இருந்தமையால் core i5 கருத்திற் கொள்ளாமல் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவால் விதந்துறைகளின் பிரகாரம் பொருந்தும் வகையில் குறைந்த விலையில் கேள்வி தெரிவு செய்யப்பட்டது.	
(ஆ)	கிளை அலுவலகங்களுக்காக 03 கைவிரல் அடையாளம் இயந்திரங்களை ரூபா. 195,000 செலவினமொன்று மேற்கொண்டு கொள்வனவு செய்யும் பெறுகைக்காக அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விடயம் தொடர்பான வறிபுணத்துவத்துடன் கூடியதாக இருக்க வேண்டிய போதிலும் 2024 ஜனவரி 31 ஆம் திகதி நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அந் நிபந்தனைகளை பூர்த்தி செய்து இருக்கவில்லை. மேலும் கொள்வனவு கூறுவிலை கோரலுக்கு கடிதங்கள் அனுப்பியதன் பின்னர் அதாவது 2024 பெப்ரவரி 13 ஆம் திகதி வேறு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று திணைக்களத்தின் செயலாளரினால் நியமிக்கப்பட்டு இருந்ததுடன் விதந்துரைகள் தயாரிக்கும் போது கைவிரல் அடையாளம் இயந்திரத்திற்காக வழங்கப்படும் உத்தரவாத காலம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு விபரக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை	இந்த திணைக்களத்திற்காக அவ்வாண்டுக்குரிய தொழில் நுட்ப குழுவொன்று அமைச்சினால் நியமிக்கப் பட்டிருந்தது. அவர்களால் தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்று வழங்கப்பட்டது. இதன் போது 2024.01.31 ஆந் திகதி இரத்து செய்யப்பட்டிருந்ததுடன் 2024.02.13 ஆந் திகதிய கடிதம் செல்லுபடியாக்கப் பட்டிருந்தது. உத்தரவாத காலம் மூன்று என கேள்வி வழங்கும் நிறுவனத்தினால் குறிப்பிடப்பட்டிருந்தது. எதிர் காலத்தில் விவரக் குறிப்புக்களில் உத்தரவாத காலத்தினை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	பெறுகை வழிகாட்டல் கோவை பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமித்தல்

4.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவாதானிப்பு	கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் நிர்வாக ரீதியாக பொறுப்பான அல்லது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரிகள் இந்த கடமைகளை	தொடர்புடைய சுற்றறிக்கையின் படி பாதுகாப்பு வைப்புத்தொகையை வைப்புச் செய்வதற்கான ஆவணங்கள்	அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம்

நிறைவேற்றுவதற்கு அரசாங்க கணக்கிற்குரிய உறுதிச்சீட்டுக்களை சான்றுபடுத்துபவர்கள் அல்லது காசோலைகளில் கையொப்பமிடுபவர்கள் உட்பட, தங்கள் கடமைகளை நேர்மையுடன் நிறைவேற்றுவதாக 612 ஆம் அதிகாரமான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் 2011 சனவரி 18 ஆம் திகதிய நீதி அமைச்சின் 01/2011 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் பிணைகளை வைக்க வேண்டிய 15 உத்தியோகத்தர்கள் தமது பிணைகளை வழங்கியிருக்கவில்லை.	தேவையான நடவடிக்கைகளுக்காக 2024 செப்டம்பர் 25, ஆந் திகதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அவற்றில் குறைபாடுகள் இருப்பதால் அவை எங்கள் திணைக்களத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. குறைபாடுகளை சரிசெய்து ஆவணங்களை மீண்டும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	பிணைகள் வழங்கப்பட வேண்டும்.

4.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஜூன் மாதத்திற்கான நீர் பட்டியலின் பெறுமதி ரூபா 86,046 ஆக இருந்ததுடன் அவ்வாறான அசாதாரண பெறுமதியொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதும் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து விரைவில் நடவடிக்கை எடுத்தல் தாமதம் காரணமாக 2024 ஜூலை மாதத்திற்காகவும் ரூபா. 86,046 அளவிலான அசாதாரண பட்டியல் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது ஜூலை மாதம் முதல் புதிய மானி பொருத்தப்பட்டு இருக்கையில் குருநாகல் கிளை அலுவலகத்தில் ஆகஸ்ட் முதல் நவம்பர் வரையான நான்கு மாதங்களுக்காக ரூபா. 62,634 பெறுமதியான நீர் பட்டியலுக்காக குருநாகல் மாநகர சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது இப்பெறுமதி மீளாய்வாண்டின் முதலாவது 06 மாதங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் உயர்ந்த பெறுமதி ஒன்றாக இருந்தது.	குருநாகல் மாநகர சபையால் 2024 ஆம் ஜூன் மாதம் முதல் நவம்பர் வரையான காலப்பகுதிக்குரிய அனைத்து பட்டியல்களும் ஒரே தடவையில் 2024 நவம்பர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தன அதன் போது 2024 ஜூன் மாதத்திற்குரிய பட்டியலுக்காக செலுத்த வேண்டிய தொகையின் பெறுமதி அசாதாரணமாக அதிகரித்து இருந்ததாக அவதானிக்கப்பட்டது பட்டியல் தாமதம் தொடர்பாக பட்டியலின் பெறுமதி அதிகரித்திருந்தமை தொடர்பாக குருநாகல் மாநகர சபையிடமிருந்து 2024.12.19 விசாரிக்கப்பட்டதுடன் 2024.12.30 ஆந் திகதி பதில் ஒன்று கிடைத்திருந்தது அந்த அறிக்கையின் பிரகாரம் மானியில் தவறொன்று இல்லையெனவும் உள்ளக நீர் கசிவு காரணமாக நீர் பட்டியல் அதிகரித்திருந்த தாக.	பட்டியல் தாமத மாகும் போது விடயப் பொறுப்பு அது தொடர்பாக ஆராய்ந்து பார்ந்து விரைவில் உரிய திகதியில் பட்டியலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தவறுகள் திருத்தம் செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

(ஆ)	குருநாகல் கிளை அலுவலகத்திற்குரிய நாட்டின் 34 நீதிமன்ற பிரதேசங்களின் 14 செயற்பாடுகள் கையளிக்கப்பட்டு இருந்த போதும் 2024 ஆம் ஆண்டிற்காக கடன்களை தீர்வு செய்து தருமாறு கோரப்பட்ட வேண்டுகோள் தொடர்பான 160 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக மக்களின் அறிந்து கொள்ளும் தன்மை குறைவடைந்ததன் பேரில் திணைக்களத்தின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் குறைவாக இருந்ததாகவும் இதன் பிரகாரம் அவதானிக்கப்பட்டது ஆண்டில் 09 அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்த போதும் மேற்படி பிரதேசத்தை இலக்காகக் கொண்டு அறிவுறுத்தும் நிகழ்ச்சி திட்டங்கள் செயற்படுத்தப்படாத இருந்தத்துடன் அறிவுறுத்தும் நிகழ்ச்சி திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	குருநாகல் நீதிமன்ற அதிகார எல்லைக்குரிய சில பிரதேசங்களுக்கு உரியதாக இருந்த போதிலும் அவற்றில் சில அரசின் காணியுடன் கூடிய நீதிமன்ற எல்லை பிரதேசங்கள் ஆகும் அரசின் காணிக்காக வழக்கு தொடருதல் குறைவாக இருப்பதால் வழக்கு சந்தர்ப்பங்கள் குறைவாகும் அறிவூட்டும் நிகழ்ச்சிகளுக்காக கோரப்பட்டுள்ள நிதி ஏற்பாடு எமக்கு கிடைக்காததால் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்க முடியவில்லை.	செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் போதியளவு பிரகாரம் அறிவுறுத்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொளளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 வது பிரிவின் பிரகாரம் ஒரு கணிசமான நியமனம் மேற்கொள்ளப்படும் வரை ஒரு பதவியில் செயற்படுவதற்கான நியமனம் ஒரு தற்காலிக நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், சிரேஷ்ட நிலையின் கீழ் வரும் பிரதம கணக்காளர் பதவி 2021 மார்ச் 17 முதல் வெற்றிடமாக உள்ளதுடன் அமைச்சின் பிரதம கணக்காளர் தற்போது இந்த பதவியின்	எமது திணைக்களத்திலுள்ள கணக்காளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு கோரிக்கை சமர்ப்பித்திருந்த போதிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமையால் எமது திணைக்களத்திற்கு இந்த கணக்காளர் பதவி நிரப்பபடவில்லை.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	கடமைகளில் மேவுகை செய்ப்படுகின்றது. பதில் கொடுப்பனவு படிகளாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இஇல் உள்ளவாறு ரூபா 187,263 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.		
(ஆ)	இரண்டாம் நிலையில் சேர்க்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 18 ஆக உள்ள போதிலும் உள்ளவாறான ஊழியர்களின் எண்ணிக்கை 16 ஆக உள்ளதால் 02 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 15 ஆக இருந்த போதிலும் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 06 ஆகுக இருந்ததால் 09 வெற்றிடங்கள் உள்ளன. மேலும், தட்டெழுத்தாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 06 ஆக உள்ள போதிலும் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை இல்லாமல் இருந்ததால் அது முழுமையாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வெற்றிடங்களாக இருந்தன.	2025 சனவரி 27 ஆந் திகதிஇவ்வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.	வெற்றிடங்களை உரிய திகதியில் பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.